**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,**
**திண்டுக்கல்.**
**முன்னிலை: திரு.S.பாக்கியராஜ், பி.எஸ்சி, பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**திண்டுக்கல்.**

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 08 ம் நாள் புதன்கிழமை

**STC No. 3318/2025**

CNR.No.TNDG03-009239-2025

**அரசுக்காக**
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம்,
திண்டுக்கல்
**குற்ற எண்.396/2024**

**......குற்றமுறையிடுபவர்**

**//எதிராக//**

முருகேசன் (வயது 43/2026)
த/பெ. ஆறுமுகம்,
எண்.296(1),
முனியப்பன் கோவில் தெரு, தோமையார்புரம்,
திண்டுக்கல்

**.......குற்றஞ்சாட்டப்பட்ட நபர்**

இவ்வழக்கு 26.12.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் தாமே முன்னிலையாகியும் ஏற்று நடத்திய வழக்கில் இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இன்று வரையிலும் இந்நீதிமன்றத்தின்

பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>**தீர்ப்புரை**</u>

கடந்த 16.06.2024 – ம் தேதி 9.00 மணிக்கு திண்டுக்கல் தோமையார்புரம் A to B ஹோட்டல் அருகில் மதுவிலக்கு சம்மந்தமாக கண்காணித்து கொண்டு சென்ற போது எதிரி முருகேசன் என்பவர் எந்த விதமான அரசு அனுமதியுமின்றி சுயலாபம் தேடும் நோக்கில் 180 ML கொள்ளளவு கொண்ட Express Brandy 10 பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி முருகேசன் மீது பிரிவு 4(1) (a) TNP ACT ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கி அவைகளை பரிசீலனை செய்து பார்க்கத் தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளித்து எதிரி மீதான குற்றம் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். மேலும் இருதரப்பும் கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் வழக்கிற்கான முகாந்திரம் இருந்ததினால் பிரிவு 4(1) (a) TNP ACT ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி குற்றவாளி இல்லை என்று கூறினார்.

3. எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையானவர்கள் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1

முதல் அ.த.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்.**

கடந்த 16.06.2024 ம் தேதி தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண். 396/2024 U/s.4(1)(a) TNP Act வழக்குகோப்பு , எதிரி மற்றும் வழக்குச்சொத்துக்களை தனது பார்வைக்கு வைத்ததை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் கருணாகரன், சதீஸ்குமார், கருப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை கைது செய்து ஜாமீனில் விடுவித்தார். மதுபாட்டில்களை உயர் அதிகாரரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்த அழிப்பு சான்று தயார் செய்தார். பின்னர் இவ்வழக்கின் தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியம் அ.சா.1 முதல் அ.சா.4 உடன் முடித்துக்கொள்ளப்பட்டு, அரசு தரப்பு சாட்சியின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து, கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் படி வினவியபோது, எதிரி அவைகளை மறுத்து, பொய் சாட்சியம் என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6. இவ்வழக்கில் அ.சா.1 தலைமை காவலர் கருணாகரன் தனது சாட்சியத்தில் கடந்த 16.06.2024ம் தேதி தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண். 396/2024 U/s.4(1)(a) TNP Act வழக்குகோப்பு , எதிரி மற்றும் வழக்குச்சொத்துக்களை தனது பார்வைக்கு வைத்ததை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் கருணாகரன், சதீஸ்குமார், கருப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்தார். மதுபாட்டில்களை உயர் அதிகாரரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்த அழிப்பு சான்று தயார் செய்தார். பின்னர் இவ்வழக்கின் தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தததாக சாட்சிமளித்துள்ளார்.

7. இவ்வழக்கில் அ.சா.2 முதல் நிலை காவலர் சதீஸ்குமார் தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டுக்கல் தெற்கு போக்குவரத்து பிரிவில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறார். இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தார். கடந்த 16.06.2024ம் தேதி 09.00 மணிக்கு நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கருப்பையா, தலைமை காவலர் கருணாகரன் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் தோமையார்புரம் A To B ஹோட்டல் அருகில் சென்றபோது இவ்வழக்கின் ஆஜர் எதிரி முருகேசன் அரசு அனுமதியின்றி சுய லாபத்திற்காக 180 ML அளவுள்ள Express Brandy மதுபாட்டில்கள் 10 பாட்டில்களை சில்லறை விற்பனைக்காக தன்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக சிறப்பு சார்பு ஆய்வாளர் எதிரியை கைது செய்து 09.10 மணிக்கு கைது செய்து மதுப்பாட்டில்களை தனிநபர்கள்

சாட்சிகள் யாரும் இல்லாததால் 09.20 மணிக்கு வழக்குச்சொத்தை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். பின்பு 10.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்தார். தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான். சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

8. இவ்வழக்கில் அ.சா.3 சிறப்பு சார்பு ஆய்வாளர் கருப்பையா தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆயவாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.06.2024 ம் தேதி 09.00 மணிக்கு நானும் தலைமை காவலர் கருணாகரன், முதல் நிலை காவலர் சதீஸ்குமார் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் தோமையார்புரம் A To B ஹோட்டல் அருகில் சென்றபோது இவ்வழக்கின் ஆஜர் எதிரி முருகேசன் அரசு அனுமதியின்றி சுய லாபத்திற்காக 180 ML அளவுள்ள Express Brandy மதுபாட்டில்கள் 10 பாட்டில்களை சில்லறை விற்பனைக்காக தன்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை கைது செய்து 09.10 மணிக்கு கைது செய்து மதுப்பாட்டில்களை தனிநபர்கள் சாட்சிகள் யாரும் இல்லாததால் 09.20 மணிக்கு வழக்குச்சொத்தை கைப்பற்றி 10.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்தேன். இதுசம்மந்தமாக நான் எதிரி மீது நிலைய குற்ற எண்.396/2024 U/s.4(1)(a) TNP Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். வழக்குகோப்பு எதிரி மற்றும் மதுப்பாட்டில்களை சார்பு ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

9. இவ்வழக்கில் அ.சா.4 சார்பு ஆய்வாளர் பிரபாகரன் தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த 16.06.2024ம் தேதி தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண். 396/2024 U/s.4(1)(a) TNP Act வழக்குகோப்பு , எதிரி மற்றும் வழக்குச்சொத்துக்களை தனது பார்வைக்கு வைத்ததை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் கருணாகரன், சதீஸ்குமார், கருப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், எதிரியை கைது செய்து ஜாமீனில் விடுவித்தேன். மதுபாட்டில்களை உயர் அதிகாரரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்த அழிப்பு சான்று தயார் செய்தேன். பின்னர் இவ்வழக்கின் தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

**<u>10. தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

அரசு தரப்பில் எதிரி மீது ச/பி. 4(1) (a) TNP Act – ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதுவேயாகும்.

11. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள 4(1) (a) TNP Act–ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. அ.சா.4 சார்பு ஆய்வாளர் பிரபாகரன் தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு

திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த 16.06.2024ம் தேதி தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலைய குற்ற எண். 396/2024 U/s.4(1)(a) TNP Act வழக்குகோப்பு , எதிரி மற்றும் வழக்குச்சொத்துக்களை தனது பார்வைக்கு வைத்ததை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் கருணாகரன், சதீஸ்குமார், கருப்பையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், எதிரியை கைது செய்து ஜாமீனில் விடுவித்தேன். மதுபாட்டில்களை உயர் அதிகாரரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்த அழிப்பு சான்று தயார் செய்தேன். பின்னர் இவ்வழக்கின் தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.1 முதல் அ.சா.4 – வரையிலானவர்களின் சாட்சியத்தை எதிரி தரப்பில் மறுக்கும் விதத்தில் குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே அ.சா.1 முதல் அ.சா.4 – வரையிலானவர்களின் சாட்சியத்தை எதிரி தரப்பில் ஏற்றுக்கொண்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.1 முதல் அ.சா.4 – வரையிலான சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கின் எதிரி அரசு தரப்பில் சொல்லப்பட்டவரான குற்றத்தை செய்துள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்ட பிரிவு 4(1)(a) TNP Act–ன் கீழான குற்றம் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என்று இந்நீதிமன்றம் கு.வி.மு.ச. பிரிவு 255(2)–ன் படி தீர்மானித்து எதிரிக்கு விதிக்கப்பட இருக்கும் தண்டனை குறித்து கேட்டபோது, தான் தெரியாமல் தவறு செய்துவிட்டதாகவும், தான் செய்த தவறை நினைத்து மனம்

வருந்தியிருப்பதாகவும், இதுவே முதல் குற்றச்சாட்டு என்றும், இனிமேல் இதுபோன்ற எந்தவிதமான குற்றச் செயலிலும் ஈடுபடமாட்டேன் என்றும், குடும்பத்தை பராமரிக்கும் பொறுப்பு உள்ளது என்றும், தன்னை மன்னித்து குறைந்தபட்ச தண்டனை மட்டும் விதித்து விடுவிக்குமாறு வேண்டினார்.

13. முடிவாக எதிரியை பிரிவு 4(1) (a) TNP Act–ன் கீழ் குற்றவாளி என்று கு.வி.மு.ச. பிரிவு 255(2)–ன் கீழ் தீர்மானித்து குற்றத்தின் தன்மை, முதல் குற்றச்சாட்டு, எதிரியின் வயது, குடும்பத்தை பராமரிக்கும் பொறுப்பு ஆகிய காரணங்களை கருத்தில் கொண்டும், எதிரியிடம் தண்டனை குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதிலினை பரிசீலனை செய்தும், எதிரிக்கு பிரிவு 4(1) (a) TNP Act–ன் கீழ் ரூ.1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) அபராதம் விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் 4 வாரங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் உத்தரவிடப்படுகிறது.

14. எதிரி இந்நீதிமன்றத்திற்கு எழுதி கொடுத்த பிணை பத்திரங்கள் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை 08 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்புரை என்னால் பகரப்பட்டது.

PACKIARAJ

Digitally signed by PACKIARAJ
Date: 2026.07.08 17:09:19 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்

**<u>பிற்சேர்க்கை</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1. திரு. கருணாகரன் ( தலைமை காவலர்)

அ.சா.2 திரு. சதீஸ்குமார் ( முதல் நிலை காவலர்)

அ.சா.3. திரு. கருப்பையா ( சிறப்பு சார்பு ஆய்வாளர்)

அ.சா.4. திரு. பிரபாகரன் (சார்பு ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வ எண். | தேதி | சான்றாவணங்கள் |
|---|---|---|
| 1 | 16.06.2024 | அத்தாட்சி |
| 2 | 16.06.2024 | முதல் தகவல் அறிக்கை |
| 3 | 16.06.2024 | அழிப்பு சான்று |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் – இல்லை</u>**

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.07.08 17:09:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்

**<u>குறிப்பு–</u>**

1. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.